ALPHA MIND POWER

# NEWSLETTER



SEPTEMBER 2019

## From Guruji's desk....

My Dear Alpha Siddha,

Writing this letter to you just a week after we came back from Rishikesh. The energy and serenity of the yatra is still lingering in my mind. It stays like that for quite some time. The inner transformation that this yatra brings about is something which stays permanently with us.

This time we went to Badrinath. It was raining and there were landslides. We had to walk some distance to cross the landslide area. Still, we managed with ease and had a wonderful time walking through Mana Village, the last village of India. We also had the divine opportunity to visit Vyas Gufa where Mahabharatha was spoken. We could sit and meditate there and feel the very high level of energy. We also visited the temple from where Lord Ganesha wrote Mahabharatha. The Saraswathy river flowing nearby and the Bheem Pull which is a bridge of just one rock across the river are all places which make us experience very divine energy. We had a very ecstatic experience when we sat in front of Badrinath for 20 minutes in the evening when Vishnu Sahasranamam was chanted. Sincerely, it was a very unique experience.

Back at Rishikesh Ashram, we had Shantagni, our 5 days residential workshop. Apart from the meditations, this included the Ganga Pooja, Ganga Aarti, Rudrabhishekam at the Shiva Temple, Athisthanam pooja at Poojya Swamiji's samadhi and Bhandara where we give food and dakshina to sadhus. This time we also had a very enjoyable satsung where our Alpha siddhas sang and danced with music accompaniment. Above all, the Ganges was in full flow and it was enough to just stand there and keep gazing at her flowing majestically, gracefully and abundantly! Taking a dip in those waters was an experience that one can never outgrow!



The whole program gives us a beautiful cleansing and this creates the inner transformation which we crave. I am writing so much about this because the whole experience is surreal and we cannot stop thinking about it every day.

The festival season has already begun. I wish you all a very happy Ganesh Chathurthi which falls tomorrow. Let all hurdles and burdens from your life be dissolved. Let your life be smooth and unstoppable like the Ganges!

At this juncture, I recall what I had written in my last newsletter about this festival. Our lives have changed in many ways. Let us also become a little more responsible. Let us stop polluting the sea waters with painted Ganeshas. Let us bring him into our house in a more permanent way. Let us keep him with us always.

Let us also take responsibility to keep our house and environment clean and pure. If every family keeps the space around their house clean, our entire environment will become clean and also green. Let us start thinking about how we can contribute to make our living space better. Let us take small steps to make this happen.

Wishing us a cleaner and greener space to live in,

**Bl**essings,

**Srimatha**



***Guruji with Alpha Siddhas at Ganga Pooja, Rishikesh***



***Guruji with Alpha Siddhas at Shantagni workshop, Rishikesh***

என் அன்புள்ள ஆல்பா சித்தரே,

ரிஷிகேஷிலிருந்து வந்து ஒரு வாரமே ஆகும் நிலையில் இந்த கடிதம் எழுதுகிறேன். அந்த யாத்திரையின் அனுபவமும் அமைதியும் இன்னமும் மனதில் தென்றல் போல வீசிக் கொண்டு தான் இருக்கிறது. இன்னும் பல நாட்களுக்கு அப்படித்தான் இருக்கும். இந்த யாத்திரையினால் ஏற்படும் உள்ளார்ந்த மாற்றம் நிரந்தரமாகவே நம்முடன் தங்கிவிடுகிறது.

இம்முறை பத்ரிநாத் சென்றிருந்தோம். மழை பெய்து கொண்டிருந்தது. மண் சரிவுகளும் இருந்தன. சற்று தூரம் நடந்து அந்த பகுதிகளை கடக்க வேண்டி இருந்தது. இருப்பினும் சுலபமாகவே இதையெல்லாம் கடந்து சென்றோம். இந்தியாவின் கடைசி கிராமம் என அழைக்கப்படும் மானா கிராமத்தில் நடந்து சென்றோம். வியாசர் மஹாபாரதம் சொன்ன குகைக்கு செல்லும் அரிய வாய்ப்பு கிட்டியது. அங்கு அமர்ந்து தியானம் செய்து அங்கிருந்த மிக உயர்வான சக்தியையும் உணர முடிந்தது. மஹாபாரதத்தை பிள்ளையார் அமர்ந்து எழுதிய கோவிலையும் தரிசித்தோம். அருகில் பாய்ந்து ஓடும் சரஸ்வதி நதியும் அதன் குறுக்கே பீம் புல் என அழைக்கப்படும் ஒரே கல்லில் நதியின் குறுக்கே அமைந்த பாலத்தையும் பார்க்கும்பொழுது மிக தெய்வீகமான உணர்வு ஏற்படுகின்றது. மாலையில் பத்ரிநாதரின் எதிரில் அமர்ந்து 20 நிமிடங்கள் விஷ்ணு சஹஸ்ரநாமம் சொல்லும்பொழுது தரிசித்தது மெய் சிலிர்க்கும் அனுபவமாகும். உண்மையாகவே அது ஒரு அற்புதமான அனுபவம் தான்.

அங்கிருந்து ரிஷிகேஷ் ஆசிரமம் திரும்பிய பின் நமது 5 நாட்கள் நிகழ்வான சாந்தக்னி நடந்தது. தியானங்கள் தவிர இந்த நிகழ்ச்சியில் கங்கா பூஜை, கங்கா ஆரத்தி, சிவன் கோவிலில் ருத்ராபிஷேகம், பூஜ்ய சுவாமியின் சமாதியில் ஆதிஸ்தானம் பூஜை, சாதுக்களுக்கு உணவும் தட்சிணையும் வழங்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றன. இம்முறை நமது ஆல்ஃபா சித்தர்களின் பாடலும் ஆடலும் கலந்த சத்சங்கமும் நடைபெற்றது. எல்லாவற்றையும் விட கங்கை நதி கரை புரண்டு ஓடியது கண் கொள்ளா காட்சியாக இருந்தது. அந்த நதி கம்பீரமாக, அழகாக, அளவற்ற நீருடன் ஓடிக் கொண்டிருந்ததை பார்த்துக் கொண்டிருந்தாலே போதும் என்று இருந்தது. அந்த நதியில் குளிப்பது என்பது என்றுமே நம்மை ஈர்க்கும் விஷயம் தான்.

இந்த யாத்திரையும் நிகழ்வுகளும் நம்மை புனிதப்படுத்துவதால் நாம் தேடும் உள்ளார்ந்த மாற்றமும் நமக்குள் ஏற்படுகின்றது. இதைப் பற்றி நான் திரும்பவும் எழுதுவதன் காரணம் இந்த அனுபவம் ஒரு கனவு போல இருக்கிறது. மனதில் நறுமணம் வீசுவது போல தொடர்கின்றது. தினமும் அதை நினைக்காமல் இருக்க முடியவில்லை.

பண்டிகை காலம் துவங்கி விட்டது. நாளை கொண்டாடும் வினாயகர் சதுர்த்திக்கு எனது வாழ்த்துக்கள். உங்கள் வாழ்வில் உள்ள தடைகளும் பாரங்களும் கரைந்து விடட்டும். கங்கையைப் போல உங்கள் வாழ்வும் அமைதியாக தங்கு தடையின்றி ஓடட்டும்.

இச்சமயத்தில் சென்ற கடிதத்தில் இந்த பண்டிகையை பற்றி நான் எழுதியதை நினைவு கூறுகிறேன். நமது வாழ்க்கையில் பல மாற்றங்கள் வந்துவிட்டன. கொஞ்சம் பொறுப்பும் வருவது முக்கியம். வர்ணம் பூசப்பட்ட வினாயகர் விக்ரகங்களை கரைத்து கடல் நீரை மாசுப்படுத்துவதை தவிர்ப்போம். அவரை நமது வீட்டில் நிரந்தரமாக தங்கும் விதமாக கொண்டு வருவோம்.

நமது வீட்டையும் அதை சுற்றி உள்ள இடத்தையும் சுத்தமாக வைத்திருக்கவும் நாம் பொறுப்பேற்போம். ஒவ்வொரு குடும்பமும் தம்மை சுற்றியுள்ள இடத்தை சுத்தமாக வைத்திருந்தாலே நாம் வாழும் இவ்வுலகம் சுத்தமானதாகவும் பசுமையானதாகவும் இருக்கும். நாம் வாழும் இந்த பூமியை இன்னும் எப்படி சிறப்பாக வைத்திருப்பது என்று சிந்திக்கத் துவங்குவோம். இதை உருவாக்க சிறு சிறு வழிகளை கூட நாம் கடைபிடிக்கலாம்.

நமது பூமி சுத்தமாகவும் பசுமையாகவும் இருக்க உதவுவோம்,

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீமாதா



***Guruji with Alpha Siddhas***
***at Swami Dayanad Athisthanam Pooja***

## SHANTAGNI FEEDBACK – August 2019

**Jayalakshmi Pradeep**

Words cannot express my gratitude for your love and blessings and guidance at every step of my journey Guruji. Shantagni was the most beautiful and blissful experience in my life. Thank you so much.

**ஜெயலட்சுமி பிரதீப்**

எனது பயணத்தின் ஒவ்வொரு படியிலும் உங்கள் அன்பும், ஆசிகளும், வழிகாட்டுதலும் நிறைந்திருந்தது, என் நன்றிக்கு வார்த்தைகள் இல்லை குருஜி. சாந்தக்னி என் வாழ்வின் மிக அழகான, பேரின்ப அனுபவத்தை கொடுத்தது. மிகவும் நன்றி!

# SHANTAGNI FEEDBACKS – August 2019

**Vasanthi**

Pranams Guruji, really Shanthagni is a very wonderful experience. I hope I will attend each and every year. Full of energy, this energy level is very extreme. Swamy Dhayanandha's ashirwad is very powerful. Really I am so, so happy. No words to express my satisfaction. Once again my pranams.

**Lakshmi**

I am very fortunate to attend the Shantagni spiritual retreat after a brief dilemma of my starting the journey. With the Divine, Dayanada Swami and Guru's blessings feel very blissful after the Rishikesh program. Dear mam, Blessed to have you as my Guru.

**Parimala Kassey**

Thanks to Srimatha and all Siddhas for the uplifting and satisfying experience...it was utterly blissful.

**Jagadeeswari Prabhakar**

Thank you Guruji for making us free of negativity and blessing with the positive side of life .with your guidance we continue to practice meditation. Thank you.

**Anuraagavi Kannan**

Pranams to Guruji My Shantagni experience: Excellent, awesome, wonderful words cannot express. Experiences are still lingering in my mind. Ganga dip, Ganga Puja, Ganga Arati, Swamiji Blessing, Bandaras Blessings, Meditations, Satsang, Dance, song, Bhajans are all excellent. Alpha Siddhas friendship with class participants, ashram food, etc like this i can keep on adding to the list. After Shantagni, my mind is calm and clear. The confusions in my mind are removed. My mind is content. My eyes are now able to read small letters without glasses. Special Thanks to Guruji for this. Shantagni fulfills everything to me. I noticed that everyone's face was much brighter on last day compared to the first day in Shantagni class. Shantagni class should be conducted only in Rishikesh that is more apt. I want to come to class every year with the blessings of Guruji. As my husband said, Shantagni has calmed the Agni of all the minds. To benefit all of us, Guruji has researched a number of things and devised a simplified meditation to all of us. I request that all Alpha Siddhas be benefited by this class. I pray to Bala that our Guruji have a long and healthy life to create more Siddhas. Guruvey Saranam. Guruvey Saranam.

**வசந்தி**

வணக்கம் குருஜி, உண்மையில் சாந்தக்னி மிகவும் அற்புதமான அனுபவம். ஒவ்வொரு வருடமும் தவறாமல் கலந்து கொள்வேன் என நம்புகிறேன். நிறைந்த சக்தி, இந்த சக்தியின் அளவு மிக தீவிரமாக உள்ளது. சுவாமி தயானந்த் சரஸ்வதியின் ஆசிர்வாதம் மிகவும் சக்திவாய்ந்ததாக இருந்தது. உண்மையில் நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். என் மன திருப்தியை சொல்ல வார்த்தைகள் இல்லை. மீண்டும் என் வணக்கங்கள்.

**லக்ஷ்மி**

எனது யாத்திரையை துவங்குவதில் ஆரம்பத்தில் இருந்த தயக்கத்திற்கு பிறகு, சாந்தக்னி ஆன்மீக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. தெய்வீகத்தன்மையும், தயானந்த சுவாமி மற்றும் குருவின் ஆசிகளுடன் ரிஷிகேஷ் வகுப்பிற்குப் பிறகு மிகவும் பேரின்ப நிலையில் இருப்பதாக உணர்கிறேன். அன்புள்ள குருஜி, உங்களை குருவாகக் கொண்டிருப்பது என் பாக்கியம்.

**பரிமளா கஸே**

ஸ்ரீமாதா மற்றும் அனைத்து சித்தர்களுக்கும் நன்றி, உயர் நிலைக்கு கொண்டு சென்ற, திருப்திகரமான அனுபவம் கிடைத்தமைக்கு நன்றி ... முற்றிலும் பேரின்ப நிலையில் இருந்தேன்.

**ஜெகதீஸ்வரி பிரபாகர்**

குருஜி அவர்களுக்கு நன்றி, தீயசக்திகளிருந்து விடுதலையளித்து வாழ்வில் நல்ல சக்தி நிரம்ப செய்தமைக்கு உங்கள் வழிகாட்டுதலுடன் தொடர்ந்து தியான பயிற்சி செய்கிறோம். நன்றி

**அனுராகவி கண்ணன்**

குருஜிக்கு வணக்கம் என்னுடைய சாந்தக்னி அனுபவம்: மிகவும் அருமை அற்புதம். வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. இன்னும் என் கண்களிலேயே இருக்கிறது. கங்கா குளியல், கங்கா பூஜை, கங்கா ஆரத்தி, சுவாமிஜி ஆசீர்வாதம், பண்டாரா ஆசீர்வாதம், தியானங்கள், சத்சங், நடனம், பாட்டு, பஜன் அனைத்தும் அருமை. வந்தவர்கள் உடன் நட்பு, ஆசிரமம் உணவு என அடுக்கிக்கொண்டே போகலாம். சாந்தக்னிக்கு பிறகு என் மனம் மிகவும் அமைதியாகவும், தெளிவாகவும் இருக்கிறது. என் மனதில் இருந்த குழப்பங்கள் விலகியது. என் மனம் நிறைவடைந்து இருக்கிறது. இப்பொழுது கண்ணாடி அணியாமலேயே என்னால் சிறிய எழுத்துக்களை படிக்க முடிகிறது. இதற்கு குருஜிக்கு ஸ்பெஷல் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சாந்தக்னி மிகுந்த நிறைவை எனக்கு அளித்தது. சாந்தக்னி வகுப்பில் அனைவரின் முகமும் முதல் நாள் இருந்ததை விட கடைசி நாள் மிகவும் பிரகாசமாக இருந்ததை கவனித்தேன். சாந்தக்னி ரிஷிகேஷில் நடப்பது தான் சிறந்தது. குருஜியின் ஆசியுடன் ஒவ்வொரு வருடமும் கிளாஸ் வரவேண்டும் என்று ஆசைப் படுகிறேன். என் கணவர் கூறியது போல் சாந்தக்னி அனைவரின் மனதில் உள்ள அக்னியை சாந்தப்படுத்தியுள்ளது. நாம் அனைவரும் பயன் அடைவதற்காக நம் குருஜி பல விஷயங்களை ஆராய்ச்சி செய்து சிம்பிளான முறையில் நமக்கு தியானம் மூலம் அமைத்துக் கொடுத்து இருக்கிறார்கள். இந்த கிளாஸை அனைத்து ஆல்ஃபா சித்தர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நம் குருஜி நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியமாகவும் இருந்து பல சித்தர்களை உருவாக்க வேண்டும் என்று பாலாவிடம் பிரார்த்திக்கிறேன். குருவே சரணம். குருவே சரணம்




***Guruji with Alpha Siddhas at Mana Village, Badrinath***



***Guruji with Alpha Siddhas at Bheem Pull. Badrinath***

**ANNOUNCEMENT**

**'KELAI MANAME'**

GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !

7.15 am Monday to Friday

You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

---

அறிவிப்பு

**'கேளாய் மனமே'**

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 7.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

**ALPHA MIND POWER - MOBILE APP**

Download the app and register. You can make advance payment for class through mobile app **ALPHA MIND POWER**

**ஆல்ஃபா மைண்ட் பவர் - மொபைல் ஆப்**

**ALPHA MIND POWER** மொபைல் ஆப் மூலமாக வகுப்பிற்கு முன் பணம் செலுத்தலாம்.

## WORKSHOP SHEDULE

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Dubai (English) | **ANUBANDHAM** | 06/09/2019 | Fri | 10am to 3pm | Namaste Yoga Centre, 54 Amman Street, Al Nahda 2, Dubai UAE +971521386030 |
| Chennai (Tamil) | **KUNDALINI MAHASHAKTHI ALPHA LEVEL-1** | 28/09/2019<br>29/09/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |
| Madurai (Tamil) | **PSYCHIC ENERGY AMRUT SIDDHI** | 12/10/2019<br>13/10/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel GRT Regency 38, Madakulam Rd, Palanganatham, Madurai. |
| Mumbai (English) | **AMRUT SIDDHI ANUBANDHAM** | 09/11/2019<br>10/11/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Kohinoor, Andheri-Kurla Road, JB Nagar Andheri- East, Mumbai- 400059 |
| Chennai (Tamil) | **SRIVIDYA AGNIKUNDAM** | 16/11/2019<br>17/11/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |
| Bangalore (English) | **CHAKRA MEDITATION AGNIKUNDAM** | 23/11/2019<br>24/11/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | **VENUE TO BE CONFIRMED** |
| Chennai (Tamil) | **SPIRITUAL COUNSELING** | 30/11/2019<br>01/12/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T Nagar, Chennai |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

***Dr. Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841272146*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

***PRINTED MATERIAL***